[2003 மார்ச் 24

50—

தென்னைப் பாதுகாப்பு

***4088—திருமதி சி.எம். சூரியகலா:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குடியாத்தம் தொகுதியில் உள்ள தென்னை மரங்களை எரியோபைட் நோய் தாக்கியுள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், தென்னை பயிரிடும் விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(இ) தென்னையில் இந்த நோய் வராமல் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) குடியாத்தம் தொகுதியில் தென்னையில் எரியோபைட் சிலந்திப் பூச்சித் தாக்குதல் உள்ளது.

(ஆ) மற்றும் (இ) தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் மூலம் தென்னை மரத்தைச் சுற்றி நுண்ணூட்டச்சத்து இடுதல் மற்றும் தென்னை மரங்களில் தெளிப்பான் மூலம் தாவரப் பூச்சிக்கொல்லிகளை மூன்று முறை தெளித்தல் முதலிய தொழில்நுட்பங்கள் அடங்கிய முன்னோடித் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்ட முடிவின் அடிப்படையில் அனைத்து விவசாயிகளும் பயன்பெறும் வகையில் மாநிலம் முழுவதும் விரிவுபடுத்தப்படும் என்பதைத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருமதி சி.எம். சூரியகலா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதன்மைத் துறையாக விவசாயத்தை மாற்றி, பஞ்சம் தீர்க்க வந்த பண்பரசி, எங்கள் இன்னல் தீர்க்க வந்த விண்ணரசி, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, வேரில் நீர் எடுத்து, தலையால் தரும் தனிச் சிறப்பு பெற்ற தென்னை மரங்கள், ஏழை எளியோரின் இனிய பானமான இளநீரையும், எந்நாளும் மருந்தாகும் தேங்காயும், நலிந்தோர் குடியிருப்புகளை நாளும் காத்திடும் கூரையையும் தருகின்றன.

2003 மார்ச் 24]

ஆண்டுக்கு பல இலட்சம் ரூபாய் வருவாய் தரும் இப்படிப்பட்ட தென்னை மரங்கள் தமிழகத்தின் வடபகுதிகளில், வேலூர் மாவட்டத்தில் அதிகம் உள்ளன. குடியாத்தம் விவசாயிகளில் 80 சதவீதம் பேர் தென்னை வைத்திருக்கிறார்கள். இந்த மரங்கள் எரியோபைட் பூச்சியால் தாக்கப்பட்டு, விவசாயிகள் நஷ்டம் அடைந்திருப்பதைக் கவனத்தில் கொண்டு, அவர்களுக்குப் பயிர்ப் பாதுகாப்பு முறைகள் மேற்கொள்ள வழங்கப்படும் மானியத் தொகையை அரசு உயர்த்துமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எரியோபைட் சிலந்தி காற்றின் மூலம் பரவுகிற ஒரு நோய். இதனை முழுமையாகக் கட்டுப்படுத்த இதுவரை மருந்து எதுவும் கண்டுபிடிக்கப்படாத நிலையில், அந்தந்த மாநிலங்களுக்கு ஏற்ற முறையில் பயிர்ப் பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுத்து வரப்படுகின்றன என்பதைத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 51, திரு. எம். ராம்குமார், மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.

51—

பாலர் பள்ளி

***6717—திரு. எம். ராம்குமார்:**

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பாபநாசம் தொகுதி, கொரநாட்டுக்கருப்பூர், மஞ்சமாவடி கிராமத்தில் பாலர் பள்ளி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

திரு. எம். ராம்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதிக்கு உட்பட்ட கும்பகோணம் ஊராட்சி ஒன்றியத்தில் கொரநாட்டுக்கருப்பூர் ஊராட்சிலே உட்கிராமமாக இருக்கின்ற இந்த மஞ்சமாவடி கிராமம் ஏறக்குறைய 750 பேர்கள் மக்கள்தொகை